## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு.சுகுமாரன் | அசல் வழக்கு எண். | 43/2013 |
| த/பெ. | - | சுப்பரமணியன். | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

02.04.2026

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

**1.** நான்தான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். யார் பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் திருவெங்கடம் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்களை நான்தான் சொன்னேனா என்றால் சரிதான். வழக்குச் சொத்து எங்குள்ளது என்றால் இரும்பையில் உள்ளது. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரு அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா பெயர் மாணிக்க நாயக்கர். என் அப்பா, சித்தப்பா மற்றும் அத்தைக்கு பாகம் பிரிந்ததாக பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில், எந்த வருடம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் 1984. 6-ம் பிரதிவாதி எனது அத்தை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி எனது சித்தப்பா என்றால் சரிதான்.

2. பாகப்பிரிவினையில் என் அப்பாவிற்கு "A" அட்டவணை சொத்தும், 1-ம் பிரதிவாதிக்கு "B" அட்டவணை சொத்தும், 6-ம் பிரதிவாதிக்கு "C" அட்டவணை சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "A" அட்டவணை சொத்துக்களை 1-ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்று என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள "A" அட்டவணை சொத்துக்களை அனைத்தையும் என் அப்பா 3-ம் நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.106/10-ன் மொத்த விஸ்தீரனம் 4 ஏக்கர் 6 செண்ட் என்றால் சரிதான். அந்த 4 ஏக்கர் 6 செண்ட் பூமி ஆதியில் வீரம்மாள் என்பவருக்கு பாத்தியமானது என்றால் சரிதான். அந்த 4 ஏக்கர் 6 செண்ட் வழக்கில் சேராத பச்சையப்பன் என்பவர் 10.03.1950-ல் 1 ஏக்கர் 33 செண்ட் பூமியை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பச்சையப்பன் கிரையம் வாங்கியது போக மீதமிருந்த சொத்துக்களைத்தான் என் தாத்தா மாணிக்க நாயக்கர் என்பவர் வீரம்மாள் என்பவரிடம் இருந்து 2 ஏக்கர் 40 செண்ட் மற்றும் 33 செண்ட் என்று 2 அயிட்டங்களாக 1954-ல் 2 கிரையம் பத்திரம் மூலமாக கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

4. பச்சையப்பன் கிரையம் வாங்கிய 1 ஏக்கர் 33 செண்ட்டை என் தாத்தா மாணிக்க நாயக்கர் மற்றும் அவரது தகப்பனார் சுப்பரமணிய நாயக்கர் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். பச்சையப்பன் என்பவர் கிரையம் வாங்கிய சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். அதனை

நாங்கள் இன்றுவரை அனுபவித்தது கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பச்சையப்பன் என்பவரின் சொத்தையும் சேர்த்து தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பச்சையப்பன் என்பவரின் சொத்தையும் தவறுதலாக சேர்த்து வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுள்ளதால் சர்வே எண்.106/10-ல் எங்களுக்கு 2 ஏக்கர் 73 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான்.

**5.** சர்வே எண்.106/10-ல் 6-ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 66 செண்ட் பூமியானது வா.சா.ஆ.1 ஆவணத்தில் "C" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 6-ம் பிரதிவாதிக்கு "C" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது குறித்து என் அப்பாவிற்கு தெரியும் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் 6-ம் பிரதிவாதிக்கு தவறுதலாக "C" அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது குறித்து எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.106/10-ல் 6-ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 1.66 ஏக்கர் போக மீதம் இருந்த 1 ஏக்கர் 7 செண்ட் பூமியைதான் என் அப்பா பாகமாக எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். தவறுதலாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்பட்டது என் அப்பாவிற்கு அப்போதே தெரியும் என்றால் சரியல்ல, என் அப்பாவிற்கு தெரியாது.

**6.** என் அப்பாவிற்கு கிடைத்த 1 ஏக்கர் 7 செண்ட் பூமியில் 66 செண்ட் பூமியை ராமச்சந்திரன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். ராமச்சந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்தது போக மீதம் இருந்த சொத்தை பூரணி அம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

அந்த பத்திரங்கள் தான் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். சர்வே எண்.106/10-ல் கிரையம் கொடுத்தது போக எங்களுக்கு மீதம் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.106/10-ன் மீது உரிமை விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான், 106/10-க்கு நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை. எந்த சொத்தை பொறுத்து நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சர்வே எண்.106/2, 106/3, 106/4, 106/5-ல் கேட்டுள்ளேன்.

**7.** சர்வே எண்.106/2, 106/3, 106/4, 106/5-ல் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை கேட்டுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.106/2, 106/3, 106/4-ல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.106/2, 106/3, 106/4, 106/5-ல் உள்ள பூர்வீக சொத்துக்கள் என்று நிரூபணம் செய்ய நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமை இல்லாத சொத்தை பொறுத்து நான் பரிகாரம் கோருகிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா இறந்த பிறகு மூத்த மகன் என்ற பெயரில் என் அப்பாதான் குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் சரியலல்ல. சர்வே எண்.106/2, 106/3, 106/4, 106/5-ல் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக இருந்திருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு பாகம் பிரிக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

**8.** சர்வே எண்.106/5-ல் 3-ல் ஒரு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பாட்டி செங்கேணி அம்மாள் அவருக்கு பாத்தியமான தனிப்பட்ட சொத்துக்களான சர்வே எண்.106/6-ல் உள்ள 73 செண்ட் மற்றும் 106/13 -ல்

உள்ள 17 செண்ட்டையும் சேர்த்து 90 செண்ட்டையும் 1-ம் பிரதிவாதியின் பிள்ளைகளுக்கு 1977-ல் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண்.85/3-ல் 42 செண்ட் பூமியும், சர்வே எண்.85/4-ல் 42 செண்ட் பூமியும் மொத்தமாக 84 செண்ட் பூமியை எனக்கும் 2-ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நாங்கள் கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான்.

**9.** 7-ம் பிரதிவாதி என்னிடமோ, என் தகப்பனாரிடமோ எந்த சொத்துக்களையும் நேரடியாக கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். 7-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்கள் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்களுக்கு பாகமாக ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். 7-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நபரின் சொத்துக்களுக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, அது தவறு என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 7-ம் பிரதிவாதியின் முன்கிரையதாரர்களின் பெயரில் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மா தற்பொழுது உயிருடன் உள்ளார், அவர் பெயர் செந்தாமரை. என் உடன்பிறந்த சகோதரிகள் பெயர் என்னவென்றால் சந்திராவதி மற்றும் பிரபாவதி. எங்கள் குடும்ப பூர்வீக சொத்துக்களில் சந்திராவதி மற்றும் பிரபாவதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. என் சகோதரிகளான பிரபாவதி மற்றும் சந்திராவதி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**10.** வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி நானும், எனது தந்தை மற்றும் எனது சகோதரர்கள் பாகப்பிரிவினை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் அயன் புஞ்சை ரீசர்வே எண்.81/11A, பழைய சர்வே எண்.106/10A-யில் 1 ஏக்கர் 33 செண்ட் மட்டும் பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அயன் புஞ்சை ரீசர்வே எண்.81/11A, பழைய சர்வே எண்.106/10A-யில் உள்ள பூமியானது வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு முன்பு எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணமும் தவறாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உரிமை இல்லாத சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**11.** வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்கள் எந்த சொத்திற்கானது என்று சர்வே எண் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி ஆவணங்களும் என் தந்தை பெயரில் உள்ளதால் அதன் பேரில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்கள் வழக்குச் சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமும் கூட்டு பட்டாவாக உள்ளதால் அதன் பேரில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் வழக்குச் சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களை நான் கூட்டாக

அனுபவித்து வருவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**12.** 7, 8 பிரதிவாதிகளை தேவையில்லாமல் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில் என் அப்பாவிற்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பரிவர்த்தனை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அந்த பரிவர்த்தனை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கக்கூடியதல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif

Vanur.